# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

# 2015


ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව

ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

**Department of Project Management and Monitoring**

**Ministry of National Policies and Economic Affairs**

# பொருளடக்கம்


01. அறிமுகம்………………………………………………………………………. 1

02. தொலைநோக்கு, செயற்பணி, இலக்குகள் மற்றும் நோக்கங்கள்………………….. 2

03. நிறுவன கட்டமைப்பு……………………………………………………………… 3

3.1 திணைக்களத்தின் ஆளணி விபரம்…………………………………… 4

3.2 வரவுசெலவு தகவல்……………………………………………………....... 4

04. திணைக்களத்தின் பணிகள்……………………………………………………....... 5

4.1 கண்காணிப்பு முறைமைகள்……………………………………………… 6

4.1.1 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியினூடாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டகளின் முன்னேற்றங்களை கண்காணித்தல் 6

4.1.2 முன்னேற்ற அறிக்கைகள் மூலமான கண்காணிப்பு……………… 7

4.1.3 கள விஜயங்கள் ஊடாக முன்னேற்றத்தைக் கண்காணிப்பு…….. 7 - 9

4.1.4 விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தல் .. 10 - 11

4.1.5 மதிப்பீட்டுத் தரவு முறைமை (EIS) பேணுதல் …………………… 11

05. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான தொழில்நுட்ப ஒத்துழைப்பு கருத்திட்டம் ……………………………………………………… 12

06. விசேட செயற்பாடுகள்

6.1 "அபிவிருத்தி கருத்திட்டங்களின் பணிகள் - 2015" வெளியிடல்…………. 12

6.2 மாவட்ட ஒருங்கிணைப்ப குழுக்கள் ஊடாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை மதிப்பிடல்…………………………… 12 - 13

6.3 100 நாள் வேலைத்திட்டம் ……………………………………………….. 13

6.4 போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் ………………………………………. 13 - 14

07. அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் கொள்திறனை விருத்தி செய்தல்…… 14

இணைப்புக்கள்

இணைப்பு 1 - நிறுவன கட்டமைப்பு

இணைப்பு 2 - வரவுசெலவுதிட்ட தகவல் பற்றிய விபரமான அறிக்கை

## 01. அறிமுகம்

கருத்திட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் முதன்மை பொறுப்பு அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சிட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை விரைவாகவும் மற்றும் வினைத்திறனாகவும் அமுல்படுத்தப்படுவதனை உறுதி செய்ய,அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றை கண்காணித்தலும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தலுமாகும்.

2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆட்சிப் பெறுப்பை ஏற்ற புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் 100 நாள் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய நாட்டின் பேண்தகு பொருளாதார விருத்தியுடன் பிரதேசங்களின் சமாந்திரமான அபிவிருத்தியையும் பெற்றுக் கொள்வது ஒட்டுமொத்த அபிவிருத்தியின் இலக்காக காணப்பட்டது.இந்த தேசிய குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக இத் திணைக்களமானது 100 நாள் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சரவையின் உப குழுவின் தீர்மானத்தினை அமுல்படுத்தலின் முன்னேற்றத்தை ஒவ்வொரு வாரத்திலும் மேற்பார்வை செய்து பிரதமர் அலுவலகத்துக்கு அறிக்கையிடப்பட்டது. அந்த வகையில் நாட்டின் பொருளாதார இலக்கை அடைந்து கொள்வதற்கு கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது பரந்த வகிபங்கினை வழங்கியுள்ளது.

அத்தோடு நிரல் அமைச்சுகளினூடாக (line ministries) அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றை ஒவ்வொரு மாதத்திலும் அதனது திட்டங்களுக்கு அமைய பகுப்பாய்வு செய்வதன் மூலம் அவை முறையாக செயற்படுத்தப்படுவதற்கு வழிகாட்டல்களையும் வசதிகளையும் செய்தல் இடம்பெறுகிறது.இதற்கு அப்பால் அபிவிருத்தி பங்காளிகள், கருத்திட்ட பணிக்குழு மற்றும் ஏற்புடைய ஏனைய நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்படும் துறைசார் முன்னேற்ற மீளாய்வு மூலம் அபிவிருத்தி கருத்திட்டங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக திணைக்களமானது தேவையான வசதிகளை வழங்குகிறது. மேலும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் காலாண்டு முன்னேற்ற அறிக்கையூடாக முன்வைக்கப்படும் தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதி செய்வதற்கு கருத்திட்டங்களின் கீழ் மட்டத்திலான முன்னேற்றத்தை கண்காணிப்பதன் பொருட்டு கள விஜயங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அந்த திணைக்களத்தின் பிரதான அபிவிருத்தி தொனிப் பொருளுக்கு அமைய 5 பிரிவுகளின் கீழ் அனைத்து கண்காணிப்பு பணிகளையும் மேற்கொள்வதற்காக வசதிகளை வழங்க நிறுவனம் மற்றும் நிதி நடவடிக்கைகளைக்காக பிரிக்கப்பட்ட பிரிவுகளுடன் 5 பிரிவுகளாக கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையின் ஊடாக 2015ஆம் ஆண்டு திணைக்களத்தின் செயலாற்றுகை முன்வைக்கப்பட்டுள்ளது.

## 02. தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை வரையறுக்கும் போது அரசின் அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வினைத்திறனாக அடைந்து கொள்வதற்காக திணைக்களத்தின் பணிகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பன முதன்மையான கரிசனைக்கு உட்படுத்தப்பட்டன.

### தொலைநோக்கு

‘‘உற்பத்தித்திறன் மிக்க அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக முதன்மை பங்காளராதல்’’

### செயற்பணி

‘‘பெறுபேறுகளை உறுதி செய்யும் பொருட்டு அரசின் அனைத்து அபிவிருத்தி கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கண்காணித்தலும் அத்துடன் மதிப்பீட்டு கேந்திர நிலையமாகவும் செயற்படுதல்’’

### இலக்குகள் / நோக்கங்கள்

i. அரசின் கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தல் பற்றிய முன்னேற்றத்தை கண்காணித்தலும் மீளாய்வு செய்தலும்.

ii. வெளிநாட்டு நிதியுதவியுடனான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் அமுலாக்கநடவடிக்கைகளை கண்காணித்தல் அத்துடன் அந்த அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அமுல்படுத்தலின் முன்னேற்றத்தை அரையாண்டு அறிக்கையாக வெளியிடுதல். அக் கருத்திட்டங்களின் முன்னெற்றத்தை துரிதப்படுத்துவதற்கு உதவவும் குறித்த நிதியை பயன்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை இல்லாமல் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

iii. அரச முதலீட்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள மிகவும் முக்கியமான கருத்திட்டங்களை கண்காணிப்பிற்கு உட்படுத்தல் மற்றும் குறித்த கருத்திட்டங்கள் உரிய கால எல்லையினுள் முறையாக அமுல்படுத்தப்படுவதனூடாக பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை அதிகரிக்க தேவையான வழிகாட்டலை வழங்குதல்.

iv. வெளிநாட்டு உதவியுடனான கருத்திட்டங்களின் பணிகளை ஆராய்வதற்கு நிதி வழங்கியவர்களுடன் இணைந்து கூட்டாக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை

நடாத்தலும் அந்த தீர்மானங்கள் தொடர்பில் குறித்த தரப்புகளுக்கு அறிவித்தலும்.

v. அரசின் 100 நாள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தலின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் அறிக்கையிடல் பற்றி ஆராய்தலும்.

vi. பொருளாதார நடவடிக்கைகள் பற்றி அமைச்சரவையின் உப குழுவின் தீர்மானங்கள் அமுலாக்கப்படுதலின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும் அறிக்கையிடலும்.

vii. மத்திய அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் அரசின் தொழில்முயற்சிகளில், 2015-2017,பெறுபேறுகளை அடிப்படையாக கொண்ட சட்டகத்தை தயாரிப்பதற்கு தேவையான வசதிகள வழங்குதல் அத்துடன் ஏற்புடைய விழிப்பூட்டல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் அந் நிறுவனங்களின் முன்னேற்றத்தை காலாண்டு அடிப்படையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்

viii. தெரிவு செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பிடலும் அதனூடாக எதிர்கால கருத்திட்டங்களின் திட்டங்களை தயாரித்தலுக்கு வழிகாட்டல்களை வழங்குதலும்.

ix. சுகாதாரப் பிரிவுக்கு வெளிநாட்டு நிதி முதலீட்டு முன்மொழிவுகளுடன் தொடர்புடைய குறிகாட்டிகளை (DLIs) அடைந்து கொள்ளுவதில் உள்ள முன்னேற்றம், அத்துடன் அந்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக உறுதிசெய்து முன்வைத்தல்.

x. திணைக்களத்தின் நிறுவனங்கள் அத்துடன் நிருவாக நடவடிக்கைகள் முகாமைத்துவம் மற்றும் கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை வலுப்படுத்தல்.

## 03. நிறுவன கட்டமைப்பு

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் மூன்று மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் ஆகியோரின் நேரடித் கண்காணிப்பின் கீழ் 05 பிரிவுகளைக் கொண்டு இயங்கிவருகிறது.அப் பிரிவுகளாவன;

1. கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவு
2. பொருளாதார உட்கட்டுமான வசதிகள் அபிவிருத்திப் பிரிவு
3. மனிதவள அபிவிருத்திப் பிரிவு
4. அரச நிருவாக,கைத்தொழில் மற்றும் நிதிப் பிரிவு
5. நிதி மற்றும் நிருவாகப் பிரிவு

மேலே குறிப்பிட்ட பிரிவுகளில் நிதி மற்றும் நிருவாகப் பிரிவு திணைக்கத்தின் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான உதவிச் சேவைகளை வழங்குவதுடன் ஏனைய பிரிவுகள் அனைத்தும்நேரடியாக அபிவிருத்தி கருத்திட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு தொடர்பிலான பணிகளில் ஈடுபடுகின்றன. (நிறுவன கட்டமைப்பு - இணைப்பு 01)

### 3.1 திணைக்களத்தின் ஆளணி விபரம்

கீழ்வரும் அட்டவணை 31 டிசம்பர் 2015 இல் இருந்து திணைக்களத்தின் ஆளணி விபரத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை இல. – 01**

**ஆளணி விபரம்**

| ஆளணி வகை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்று தர அலுவலர்கள் | 37 | 29 | 08 |
| மூன்றாம் நிலை அலுவலர்கள் | 35 | 23 | 12 |
| இரண்டாம் நிலை அலுவலர்கள் | 01 | 01 | - |
| ஆரம்ப நிலை அலுவலர்கள் | 19 | 17 | 02 |
| மொத்தம் | 92 | 70 | 22 |

### 3.2 வரவுசெலவுத்திட்ட தகவல்கள்

2015ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட செலவுகள் மதிப்பீடு மற்றும் வருடாந்த செலவுகள் வரைபடம் இல. 01 ஊடாக முன்வைக்கப்படுகிறது. வரவுசெலவு தகவல்கள் பற்றிய விபரமான அறிக்கையொன்று இணைப்பு இல. 02 ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.


**அட்டவணை இல.02**

**மூலதன மற்றும் மீண்டெழும் செலவு - 2015**

| மூலதன மற்றும் மீண்டெழும் செலவு - 2015(ரூ.மி) | | |
|---|---|---|
| வகை | மதிப்பீடு | உண்மைச் செலவு |
| மூலதனச் செலவு | 78.68 | 13.15 |
| மீண்டெழும் செலவு | 21.94 | 78.62 |
| மொத்தம் | 100.62 | 91.77 |

**வரை படம் இல. 01**

**வரவு செலவுத் திட்ட தகவல் -2015**



### 4.0 திணைக்களத்தின் பணிகள்

2015ஆம் ஆண்டு ஆட்சிப் பெறுப்பை பெற்றுக் கொண்ட புதிய அரசாங்கம் பேண்தகு உயர் பொருளாதார அபிவிருத்தியை விருத்தி செய்யும் நோக்குடன் அரசின் அபிவிருத்திட்டமானது‘100 நாள் அபிவிருத்தித் திட்டம்” என்ற பெயரில் அமுல்படுத்தப்பட்டது. பரந்த அரச குறிக்கோள்களுக்கு சாமாந்திரமாக தனிநபர் மற்றும் பிரதேச பாரபட்சங்களை குறைத்து, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்கான தேசிய நிகழ்ச்சிட்டமொன்று 2015ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது.

விசேடமாக பிரதேச ரீதியாக மற்றும் துறைசார் அடிப்படையில் பின்னடைந்துள்ள துறைகளை அடையாளம் கண்டு,2015ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டிற்கு அமைய விருத்தி செய்யப்பட வேண்டிய மாவட்டங்கள் சிலவற்றை விசேட பொருளாதார வலயங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன. அந்த வகையில் அரசாங்கத்தினால் அபிவிருத்தி தொனிப் பொருட்களை ஏற்படுத்தி அவற்றை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு மத்திய அரசாங்கத்தின கீழ் சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் 1051 தொடங்கப்பட்டுள்ளன. இந்த கருத்திட்டங்களில் 306 கருத்திட்டங்களின் செலவு 500 மில்லியன் ரூபாவினை விஞ்சும் பாரிய கருத்திட்டங்களாகும். மொத்தச் செலவுகளில் மதிப்பீட்டுக்கு அமைய கருத்திட்டங்கள் வகையீடு அட்டவணை 03இல் காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு அப்பால் அரசாங்கத்தின் 100 நாள் அபிவிருத்தி வேலைத்திட்டம் அமுல்படுத்தல் தொடர்பிலான முன்னேற்ற மேற்பார்வை மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சின் உப குழுவின் தீர்மானங்கள் அமுல்படுத்தல் தொடர்பில் மீளாய்வு மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டன. 2015.05.19ஆம் திகதியில் இருந்து உப குழுவின் தீர்மானங்களின் முன்னேற்றம் வாராந்தம் மற்றும் மாதாந்தம் அக் குழுவுக்கு முன்வைக்கப்பட்டன.

**அட்டவணை இல. 03**

**மொத்த செலவுக்கு அமைய கருத்திட்டங்களின் வகைகள் (ரூ.மி.)**

| நிதி மூலம் | 500< | 50 -500 | 50> | மொத்தம் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு | 141 | 29 | 5 | 175 |
| உள்நாட்டு | 165 | 350 | 361 | 876 |
| மொத்தம் | 306 | 379 | 366 | 1051 |

நிரல் அமைச்சின் கீழ் பணியாற்றும் அரச தொழில்முயற்சிகள்,2015-2017,பெறுபேறு அடிப்படையிலான சட்டகத்தை தயாரிப்பதற்காக ஏற்புடைய ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திணைக்கள உத்தியோகத்தர்களின் செலாற்றுகையை மேம்படுத்துவதற்காக தேவை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு திணைக்கள உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் கருத்திட்ட கண்காணிப்பு முறைமையை இற்றைப்படுத்துவதற்காக பயிற்சி மற்றும் செயலமர்வுகள் 02 நடாத்தப்பட்டுள்ளன.

அரச முதலீட்டுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள வளங்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்ய இந்த அபிவிருத்தி கருத்திட்டம் முறையாகவும் தொடர்ச்சியாகவும் கண்காணிக்கவும் அத்துடன்தேவையான சந்தர்ப்பங்களில் மதிப்பீடுகளை செய்யும் பொறுப்பு முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே 2015ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் உள்ள பல்வேறு கண்காணிப்பு முறைமைகளை உபயோகித்து இந்த கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் கண்காணிப்பதற்கு திணைக்களத்தினால் முடிந்துள்ளது.

### 4.1 கண்காணிப்பு முறைமைகள்

2015ஆம் ஆண்டில் இவ் அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் நிகழ்ச்சித்திட்டங்களினதும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் பணியினை திணைக்களமானது இலத்திரனியல் மென்பொருள் தொகுதி, செயற்திட்ட அறிக்கைகள், களவிஜயம் செய்து பெற்ற அறிக்கைகள், விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பவற்றினூடாக பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு முறையின் கீழும் அடையப்பெற்ற முன்னேற்றங்கள் வருமாறு:

#### 4.1.1 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியினூடாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டகளின் முன்னேற்றங்களை கண்காணித்தல்

குறித்த நிதியாண்டினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியினூடாக அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மாதாந்த முன்னேற்ற அறிக்கைக்கு அமைய கருத்திட்டங்கள் குறித்த நேர அட்டவணைக்கு அமைய அமுல்படுத்தப்படுகிறதா, இல்லையா அல்லது தற்காலிகமான நிறுத்தப்பட்டுள்ளதா என்ற விடயங்கள் பற்றிய இத் திணைக்களம் ஊடாக கண்காணிக்கப்படுகிறது. மேலும் அந் நிகழ்ச்சித்திட்டங்களின் மொத்த மதிப்பீட்டினூடான ஒதுக்கீடு மற்றும் உண்மை செலவு ஆகியவற்றின் முன்னேற்றத்தை ஆராய்ந்து நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களில் உள்ள பிரச்சினைகள்அடையாளம் கண்டு அப்பிரச்சினைகள் தொடர்பில் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அத்தோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி ஊடாக அமுல்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் மும்மாதத்திற்கு ஒரு முறை ஆராயப்படுவதற்காக மத்திய அமைச்சுக்கு தொடர்புடைய இணையத் தரவு தொகுதியொன்று திணைக்களத்தினால் பராமரிக்கப்படுகிறது.

### 4.1.2 முன்னேற்ற அறிக்கைகள் மூலமான கண்காணிப்பு

மத்திய அமைச்சினூடாக அமுல்படுத்தப்படும் கருத்திட்ட மற்றும் வருடாந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அமைச்சுகளிடமிருந்து மாதாந்த,காலாண்டு அடிப்படையில் இத் திணைக்களத்திற்கு முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதுடன் அவ் அறிக்கையை கண்காணித்து திட்டங்களை அமுல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் அடையாளம் காணல் இத் திணைக்களத்தின் பணியாகும்.

### 4.1.3 கள விஜயங்கள் ஊடாக முன்னேற்றத்தைக் கண்காணிப்பு

கள விஜயங்கள் கருத்திட்ட கண்காணிப்பில் முக்கிய அங்கமாகக் காணப்படுகின்றன. முன்னேற்ற அறிக்கைகள் ஊடாக பெறப்படும் தகவல்களுக்கு மேலதிகமாக இத்திணைக்கள அலுவலர்கள் கள விஜயங்களை மேற்கொள்வதனூடாகவும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பான உண்மையான தரவுகளையும் சேகரிக்கின்றனர்.இக்கள விஜயங்களின் போது பயனாளிகளிடமிருந்தும் ஏனைய பங்குதாரர்களிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பெறப்படும் தகவல்கள், மறுமொழிகள் மற்றும் நேரடி அவதானிப்பு என்பவற்றின் பெறுபேறாக கருத்திட்டங்கள் சிலவற்றின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்கான இடையீடுகள் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது உண்மை நிலையை விளங்கிக்கொள்வதற்கு கள விஜயங்கள் உதவியாக அமைகின்றன. கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் அலுவலர்களால் இலத்திரனியல் முறைமைகளில் உள்ளீடு செய்யப்படும் தகவல்களை ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வு செய்யும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கின்றது.இதற்கு மேலாக கிராம பிரதேசங்களில் காணப்படும் அபிவிருத்தி தேவைகளை அடையாளம் காணுவதற்கும் அவற்றை உரிய அதிகாரிகளுக்கு அனுப்புதற்கும் இதனூடாக சந்தர்ப்பம் கிடைக்கிறது. எனவே திணைக்களத்தின் செலாற்றுகையை உயர்த்துவதற்கு கள விஜயங்கள் பாரிய பங்களிப்பை செய்து வருகிறது. 2015 ஆம் ஆண்டு திணைக்களத்தினால்17 கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுஅவதானிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கவனத்திற் கொண்டு பொருத்தமான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் தரப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றில் பல பிரச்சினைகளுக்கு மிகவும் விரவாக தீர்வு வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 04**

**களவிஜயத்தினூடாக கண்காணித்தல் - 2015**

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட கள விஜயங்களின் எண்ணிக்கை | ஏற்புடைய தரப்புகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட பிரச்சினைகள் |
|---|---|---|
| விவசாய, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அபிவிருத்திப் பிரிவு | 01 | 08 |
| பொருளாதார உட்கட்டுமான அபிவிருத்திப் பிரிவு | 07 | 01 |
| மனித வள அபிவிருத்திப் பிரிவு | 03 | 03 |
| அரச நிருவாக கைத்தொழில் மற்றும் நிதிப் பிரிவு | 06 | 02 |
| மொத்தம் | 17 | 14 |

**காலி சக்திப் பிரப்பாக்கி அபிவிருத்தி கருத்திட்டம்**





**தேசிய அதிவேக துறை கருத்திட்டம்**





**மாளிகாவத்தை சிறுநீரக வைத்தியசாலை கண்காணிப்பு**





**பண்டகசாலை பரிசோதனை நிதி முகாமைத்துவ கருத்திட்டம்**







### 4.1.4 விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தல்

2015 ஆம் ஆண்டு பாரிய கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக இத்திணைக்களத்தில் பல்வேறு கூட்டங்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், வெளிநாட்டு உதவிகளை வழங்கும் தரப்பினர், மத்திய அமைச்சு அலுவலர்கள் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஏனைய திணைக்களங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பல இடம்பெற்றன.

அந்த வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் 2 இத் திணைக்களத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் 2015 யூன் 4,5 மற்றும் 2015 நவம்பர் 3,4 ஆகிய தினங்களில் மிலோதா நிறுவனத்தில் இடம்பெற்றது. தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உட்பட, அந்த அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிட பணிப்பாளரும் கூட்டத் தொடருக்கு தலைமைத்தாங்கினர்.

கருத்திட்டங்களை அதற்கு ஒதுக்கப்பட்ட காலத்தினுள்ளே நிறைவு செய்து முதலீட்டின் செலாற்றுகை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், கருத்திட்டத்தைப் பாதிக்கும் பொது பிரச்சினைகளும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டன. மீளாய்வின் பிரதான நோக்கம் தீர்க்கப்படாத நீண்டகாலப் பிரச்சினைகளை சிறந்த ஒழுங்கமைப்புடன் தீர்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகள் வழங்குவதாகும்.

இதற்கு மேலாக, வேறு நிரல் அமைச்சிகளினால் ஒழுங்கமைக்கப்படும் நீர், மின், நீர்பாசன, வீதி ஆகிய பிரிவுகளிலான அபிவிருத்தி கருத்திட்டங்களில் சிறந்த பெறுபேற்றை உறுதி செய்து கொள்ள இந்த தனித் தனி கருத்திட்ட செயற்பாட்டு கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், மற்றும் கலந்துரையாடல்கள் என்பனவற்றுக்குதிணைக்களமானது குறித்த பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு வழங்கியுள்ளது.

மேலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தனித் தனி கருத்திட்டங்கள் தொடர்பில் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பவற்றில் பங்குபற்றி கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 05

**2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்**

| விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 25 |
| துறைசார் கூட்டங்கள் | 1 |
| நிதி வழங்கு நிறுவனங்களுடன் செய்யப்பட்ட கூட்டங்கள் | 26 |
| செயற்பாட்டு குழு கூட்டங்கள்/ கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் | 48 |
| வேறு விசேட கூட்டங்கள்/ கலந்துரையாடல்கள் | 46 |
| **மொத்தம்** | **146** |

**வெளிநாட்டு உதவி வழங்கும் தரப்புகளுடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு**






### 4.1.5 மதிப்பீட்டுத் தரவு முறைமை (EIS) பேணுதல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி ஊடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்ற மற்றும் நிறைவு செய்யப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களின் மீளாய்வு அறிக்கையின் சாரம்ச விபரங்ளை உள்ளடக்குவதற்கு இணையத்தூடான மதிப்பீட்டு தகவல் முறைமையொன்று திணைக்களத்தினால் தயார்க்கப்பட்டுள்ளது.குறித்த முறைமையின் முதன்மை நோக்கம் யாதெனில் கருத்திட்ட மதிப்பீட்டின் ஊடாக வெளிவரும் விடயங்கள், அவதானிப்புகள் மற்றும் ஆய்வு மூலம் பெறப்பட்ட அறிவு மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் என்பவனவற்றை வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் திட்டமிடல் ஆகிய நடவடிக்கைகளின் போது மிகவும் பெறுபேறுமிக்கதாக பயன்பாட்டை உறுதி செய்வதாகும். மதிப்பீடு செய்யப்பட்ட 50 கருத்திட்டங்களின் அறிக்கைகள் தற்போது இணையமைய தகவல் முறைமையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் 2015ஆம் ஆண்டில் 04 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## 5.0 ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான தொழில்நுட்ப ஒத்துழைப்பு கருத்திட்டம் (கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்கத்தின் கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பற்றிய திறனை உபாயங்களுடன் மேம்பாடடைய செய்தல்)

இந்த கருத்திட்டத்தின் நோக்கம், கருத்திட்ட ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு, மதிப்பீடு என்பவற்றோடு தொடர்பான பிரச்சினைகளை தீர்த்தல் தொடர்பில் மிகவும் வினைத்திறனான பணியினை உபாய அடிப்படையில் மேற்கொள்ளக்கூடியவகையில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மீளாய்வு திணைக்களத்தை பலப்படுத்தலாகும்.

2015ஆம் ஆண்டினுள் இந்த கருத்திட்டங்கள் ஊடாக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. திணைக்கள உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்துவதற்காக மேற்குறித்த கருத்திட்டங்களை மதிப்பிட வசதியளிப்புகள் செய்யப்பட்டன.
2. குறித்த மதிப்பீட்டு அறிக்கையானது குறித்த தரப்பினர்கள் பங்குகொண்ட செயலமர்வொன்றின் போது கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டதுடன், அதன் போது அவர்களிடம் பெற்ற கருத்துக்கள் அறிக்கை தயாரிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

## 6.0 விசேட செயற்பாடுகள்

### 6.1 "அபிவிருத்தி கருத்திட்டங்களின் பணிகள் - 2015 வெளியிடல்

தேசிய நிதி மற்றும் வெளிநாட்டு கடன் மற்றும் நன்கொடை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களும் அமைச்சின் மட்டத்திற்கு உட்படுத்தப்பட்ட "அபிவிருத்தி கருத்திட்டங்களின் செயலாற்றுகை – 2015" என்ற அரை ஆண்டு மற்றும் ஆண்டு தோரும் வெளியிடப்படுகிறது.

### 6.2 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஊடாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை மதிப்பிடல்

கிராம மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவும் கல்வி மற்றும் சுகாதரம் ஆகியவற்றில் பண்புரீதியான முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் 2015ஆம் ஆண்டில் பதவியேற்ற புதிய அரசாங்கம் முன்னினுரிமை வழங்கியுள்ளது. 2015ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நிரல் அமைச்சுகளின் விடயப்பரப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் முன்னைய அமைச்சுக்களின் கீழ் இருந்த கருத்திட்டங்கள் கைமாறியமை என்பவற்றின் காரணமாக நிதியை வழங்குவதில் சிக்கல்கள் மற்றும் முரண்பாடுகள் ஏற்பட்டன.

அதனால் 2014ஆம் ஆண்டில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு ஊடாக அமுல்படுத்தப்பட்ட பணிகள் நிறுத்தப்படாதிருந்த அபிவிருத்தி முன்மொழிவுகள் பற்றிய விசேட மதிப்பீடு மற்றும் ஆய்வுகளை செய்து நிதி அமைச்சு அறிக்கை சமர்ப்பிக்குமாறு எமது திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் இத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் குழுகள் பல கொழும்பு, மாத்தறை, பொலன்னறுவை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாக விசேட ஆய்வு மற்றும் மதிப்பீட்டை மேற்கொண்டு நிதி அமைச்சு மற்றும் தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களத்திற்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6.3 100 நாள் வேலைத்திட்டம்

100 நாள் வேலைத்திட்டமானது 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட 100 முன்மொழிகளை உள்ளடக்கிய உடனடி உதவிகளை உள்ளடக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திடமாகும். புதிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தின் சாரம்சமாக முன்வைக்கப்பட்ட ''100 நாட்களில் புதிய நாடு'' என்ற குறிக்கோளைக் கொண்டு அந்த அபிவிருத்தி முன்மொழிவுகள் ஒவ்வொரு அமைச்சினூடாக அமுல்படுத்தப்பட்டன.

இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படும் விதத்தின் முன்னேற்றம் 2015.02.02ஆம் திகதியில் இருந்து 2015.04.23ஆம் திகதி வரை வாரம் தோரும் மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னேற்றங்களை அறிக்கையிடல் அத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு அந் நிகழ்ச்சித்திட்டங்களின் மாதாந்த முன்னேற்றம் அமைச்சின் செயலாளர் அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டதுடன், குறித்த முன்னேற்ற அறிக்கை திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 6.4 போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள்

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பிள்ளைகளின் மந்த போசாக்கு நிலைமையை இல்லாதொழித்தல், ஆரோக்கியமான மக்களை உருவாக்குதல் என்ற நோக்கில் போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் 2015ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டன. பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினூடாக அமுல்படுத்தப்பட்ட இந்த கருத்திட்டத்தினூடாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா. 20,000 பெறுமதியான போசனை உணவுகள் அடங்கிய பொதியொன்று வழங்குவதற்கு முன்மொழியப்பட்டது. நாட்டின் அனைத்து மாவட்டங்களில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மாதம் ரூபா. 2,000 பெறுமதியான போசனை உணவுகள் அடங்கிய பொதியொன்றை கர்ப்ப காலத்தின் கடைசி ஆறு மாதங்கள் மற்றும் பிள்ளை பிறந்து நான்கு மாதங்களுக்கு வழங்கப்பட்டன.

பிரதமர் செயலக செயலாளரின் ஆலோசனைக்கு அமைய இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இந்த திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக அம்பாந்தோட்டை, அனுராதபுரம் மற்றும் மொணராகலை ஆகிய மூன்று மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் நிறை பற்றிய தகவல்கள் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு அவை தொடர்பாக பிரதமர் செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்டது.

## 7.0 அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் கொள்திறனை விருத்தி செய்தல்.

திணைக்கள அலுவலர்களின் கொள்திறனை விருத்தி செய்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் அதனுள் கருத்திட்டம் திட்டமிடல், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டை இலக்காக கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டன. அனைத்து பயிற்சி செயலமர்வுகள் நிறைவடைந்த பின்னர் அந்த பயிற்சியினால் பெறப்பட்ட அறிவை மற்றும் திறனை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு, பயிற்சியைப் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் அது அவர்களின் முன்வைப்பு திறனை மேம்படுத்துவதற்கும் உதவியது.

2015ஆம் ஆண்டினுள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயலமர்வுகளின் விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

**அட்டவணை இல. 06**

**பணிக் குழுவுக்கான பயிற்சி - 2015**

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | உள்நாட்டு/ வெளிநாட்டு | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| குறுங் காலப் பயிற்சி | வெளிநாட்டு | 08 |
| நீண்ட காலப் பயிற்சி | வெளிநாட்டு | 01 |
| நீண்ட காலப் பயிற்சி | உள்நாட்டு | 01 |
| குறுங் காலப் பயிற்சி | உள்நாட்டு | 171 |
| தமிழ் மொழிப் பயிற்சி கற்கைநெறி | உள்நாட்டு | 15 |
| சிங்கள மொழிப் பயிற்சி கற்கைநெறி | உள்நாட்டு | 04 |
| **மொத்தம்** | | **200** |